[1979 மார்ச் 30

பரமக்குடி பால் குளிர்பதன நிலையம்.

*குறுகியகால வினா எண் 31 — திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பால் குளிர் பதன நிலையத்துடன் கடலாடி தொகுதியில் உள்ள கிராமங்களை இணைத்து ரூட் போடுவதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்கப் பெற்றுள்ளதா ?

(ஆ) அப்படியானால் தாமதத்திற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) ஆம்.

(ஆ) பால் பெருக்குவதற்கான வழி வகைகள், போக்கு வரத்து வசதிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து திட்டமிட்டுதான் பால் சேகரிப்பு வழித் தடங்கள் அமைத்தல் முறைப்படி செய்ய இயலும். இதில் காலதாமதமில்லை.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த பரமக்குடி பால் குளிர் பதன நிலையத்துடன் கடலாடி தொகுதி யில் உள்ள கிராமங்களை இணைத்து ரூட் போடவில்லை. அப்படி போடாத காரணத்தாலே சங்கத்தை பதிவு செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். வங்கிகளும் கடன் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே அந்தக் குறை நிவர்த்திக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, முதல் கட்டமாக 27 சங்கங்களை இரண்டு பெரிய வழித் தடங்களில் பரமக்குடி, மஞ்சக் கொல்லை, இராமநாதபுரம் வழித் தடமும், பரமக்குடி, முதுகுளத்தூர், அபிராமம் வழித்தடமும் அமைக்கப்படுகின்றன. இரண்டாவது கட்டமாக கடலாடி தொகுதியை இணைக்க வழித்தடம் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-10.]

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கடலாடி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகள் மிகவும் வறட்சிக்கு உட்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. பரமக்குடி பால் குளிர்பதன நிலையம் 25 மைல் தூரத்தில்தான் இருக்கிறது. ஆகவே, ரொம்ப பிற்பட்ட பகுதி என்ற காரணத்தை வைத்தாவது அந்தப் பகுதியிலுள்ள பல கிராமங்களை இணைப்பதற்கு அரசு முயற் சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, முதுகுளத்தூர், அபிராமம் ஆகியவை இணைக்கப்பட்டு 13 சங்கங்கள் அந்தப் பகுதியில் செயல்படுகின்றன. இரண்டாவது கட்டமாக இந்த ஆண்டில் கடலாடி பகுதியில் மேற் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும், பல வழித் தடங்களை அமைக்கவும் அரசு முடிவு செய்திருக்கிறது. விரைவிலே அது செயல்படுத்தப்படும்.

Water from Neyyar D0m

*Q. No. 556 —THIRU J. JAMES : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether there was an agreement between the Government of Tamil Nadu and the Government of Kerala regarding the sharing of water in Neyyar Dam ;

(b) if so, how much was agreed to be given to Tamil Nadu ;

(c) whether Tamil Nadu is getting the quantity of water agreed upon ; and

(d) if not, what action has been taken by this Government to get the agreed waters for Tamil Nadu ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ): நெய்யாறு நீர்ப்பாசன திட்டத்தின் 2 வது கட்டத்தின்கீழ் கேரளம் மற்றும் தமிழ்நாடு மாநில அரசுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்பாட்டிற்கிணங்க, கேரளா விற்கு வினாடிக்கு 450 கன அடி தண்ணீரும் தமிழ் நாட்டிற்கு வினாடிக்கு 150 கன அடி தண்ணீரும் வழங்குவதற்கேற்ப வடிவமைப்புக் கால்வாய் அமைந்திருத்தல் வேண்டும்.

(இ) மற்றும் (ஈ) : கன்னியாகுமரி கிளைக் கால்வாயின் தலைப்பில் ஒப்புக் கொள்ளப்பட்ட அளவு தண்ணீரை கேரள அரசு விடாதபடியால், தமிழ்நாட்டு நீர்ப்பாசன உரிமைகளை பாதுகாப்பதற்கு, நிர்ணயிக்கப்பட்ட அளவாகிய வினாடிக்கு 150 கன அடி தண்ணீரை வழங்குவதின் அவசியத்தை வலியுறுத்தும் பொருட்டு, இவ்வரசு இப்பொருள் குறித்து கேரள அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.